RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2515

OPEN ACCESS

# பத்துப்பாட்டில் தொழில்கள்

சு. சுரேந்திரன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, கொங்கு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு-638107, தமிழ்நாடு, இந்தியா

# Careers in Ten Idylls

S. Surendran [a, *]

[a] Department of Tamil, Kongu Arts And Science College (Autonomous), Erode -638107, Tamil Nadu, India

* Corresponding Author: surendartamil07@gmail.com

Received: 17-11-2024
Revised: 06-01-2025
Accepted: 18-01-2025
Published: 24-01-2025

Check for updates

**ABSTRACT**

After becoming civilized, man started living in different places. He started living on the banks of the river and started various businesses there. The Paleolithic people do not seem to have settled down anywhere. They kept moving from place to place. Though they lived mostly in the plains, they sometimes lived in caves in the mountains for fear of wild animals. In particular, he cultivated the land along the banks of the river because of the need for water. Due to the increase in population, he started living in different places. Later, according to the nature of the land, they were divided into five lands and industries were carried on according to their nature.

**Keywords:** Paleolithic people, Ten Idylls, Nature, Sangam literature

## முன்னுரை

மனிதன் நாகரீகம் அடைந்த பிறகு பல்வேறு இடங்களுக்குச் சென்று வாழத் தொடங்கினான். ஆற்றங்கரை ஓரம் வாழத் தொடங்கிய அவன் பல்வேறு தொழில்களையும் அங்கேயே தொடங்கினான்."பழங்கற்கால மக்கள் ஓரிடத்திலும் நிலையாகத் தங்கி வாழ்ந்து வந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் இடம் விட்டு இடம் நகர்ந்து கொண்டே இருந்தனர்.பெரும்பாலும் அவர்கள் சமவெளிகளில் வாழ்ந்து வந்தனராயினும், சிற்சில சமயம் காட்டு விலங்குகளுக்கு அஞ்சி மலைக்குகைகளில் ஒடுக்கி வாழ்ந்ததுமுண்டு" என்னும் செய்தியின் வாயிலாக பழங்கால மக்கள் பல்வேறு இடங்களில் வாழ்ந்ததாக அறிய முடிகிறது .தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், கே.கே பிள்ளை, 2000, ப -35 குறிப்பாகப் பயிர்தொழிலை நீர் தேவையின் காரணமாக ஆற்றங்கரையோரமாகச் செய்தான். மக்கள் பெருக்கம் காரணமாக பல்வேறு இடங்களுக்குச் சென்று வாழத் தொடங்கினான். அதுவே பிற்காலத்தில் நிலத்தின் தன்மைக்கேற்ப அவை ஐந்து நிலங்களாகப் பகுக்கப்பட்டு அதன் தன்மைக்கேற்ப தொழில்கள் நடைபெற்றன.

## உழவுத் தொழில்

"கூனி குயத்தின் வாய்நெல் அரிந்து
குன்று எனக் குவை இய குன்றாக் குப்பை
கருந் தெற்று மூடையின் இடம் கெடக்கிடக்கும்

சாலி நெல்லின், சிறை கொள் வேலி

ஆயிரம் விலையுட்டு ஆக " பொருந.242 -247

பத்துப்பாட்டு மூலமும் உரையும் முதல் பகுதி உரையாசிரியர் முனைவர் இரா மோகன், 2014, ப-90 என்னும் பாடல் அடியில்,

சோழ நாடு சோறுடைத்து என்னும் பழமொழிக்கேற்ப பொருணறாற்றுப்படையில் முடத்தாமக்கண்ணியார் மகளிர் நெற்கதிர்களை அறுத்துக் கட்டி மலை போல் அடுக்கி அவற்றைப் பிணையடித்து மேருமலை போல் குவித்து அந்த நெற்பொலியை நெருங்கத் தைத்த மூட்டைகளாக அடுக்கி வைக்க, எங்கும் வெற்றிடம் இல்லை என்னும் படி அடுக்கி வைப்பர். இத்தகைய சிறப்பிற்கு முக்கியக் காரணம் காவிரி ஆற்றில் நீர் பெருகிப் பாய்வதனால் ஒரு வேலி ஆயிரம் கலம் விளைவிக்கும் நாடு சோழநாடு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு ஏக்கர் ஒன்றுக்கு 150 கலம் விளையக்கூடிய பகுதி சோழப் நாட்டில் தற்போதும் உண்டு என்பதன் வாயிலாக அன்று முதல் இன்று வரை உழவுத் தொழில் செழிப்பாக இருந்ததை அறியலாகிறது.

"சிறு தினை கொய்ய, கவ்வை கருப்ப,

கருங்கால் வரகின் இருங் குரல் புலவர்" மதுரைக்காஞ்சி 271 - 272

பத்துப்பாட்டு பாடலும் பொருளும் உரையாசிரியர் முனைவர் க.த.நீலகண்டன், 2000, ப- 189 என்னும் பாடல் அடியில், மதுரைக்காஞ்சியில் மாங்குடி மருதனார் சிறிய தினைக்கதிர்கள் அறுக்கப்படவும் எள்ளினது இளங்காய்கள் முற்றி கருமை நிறம் அடையவும் கரிய தாளினை உடைய வரக்கின் கதிர்கள் முற்றி ஈரம் உலரவும் உழவர்கள் தினைப் பயிர்களை அறுவடை செய்தார்கள். எனவே எள் மற்றும் தினைப் பயிர்கள் தற்போதும் விளைவிக்கப்பட்டு மக்கள் உணவுப் பொருள்களாகப் பயன்படுத்தப்பட்டு வருவதன் வாயிலாக தினைத் தொழிலும் தமிழர்கள் சிறப்புற்று விளங்கினார்கள் என்பதை அறியமுடிகிறது.

"நீலத்து அன்ன விதைப்புன மருங்கின்

கெவ்வை போகிய கருங்காய் பிடி ஏழ்

நெய் கொள் உருகின பல் கவர் ஈர் எண்

குளிர் புரை கொடுங்காய் கொண்டன அவரை;

மேதி அன்ன கல் பிறங்கு இயவின்,

வாதி கை அன்ன கவைக் கதிர் இறைஞ்சி

இரும்பு கவர்வுற்றன பெரும் புன வரகே" மலைபடுகடாம் 102 - 121

பத்துப்பாட்டு பாடலும் பொருளும் உரையாசிரியர் முனைவர் க.த.நீலகண்டன், 2000, பக் - 250 - 251.

மலைபடுகடாமில் பெருங்கௌசிகனார் நிலத்தினை உழுது விதைத்த விதைகள் எல்லாம் இன்னாறே விளைய வேண்டும் என்று விரும்புகிறார்களோ அவ்வாறே விளையும் அம்மழையோடு தங்கின அகன்ற கொல்லை நிலத்தில் பருவம் பொய்யாத மேகத்தின் கொடையால், நாட்டின் இயற்கை வளம் பெருகியது. நிலத்தில் இட்ட விதைகள் விளைந்து பயன் தந்தன. முசுண்டை ,எள் ,தினை,அவரை ,வரகு, மூங்கில் ,நெல் ,வெண் சிறு கடுகு ,இஞ்சி, கவலைக்கிழங்கு ,மலை வாழை ,பெரு மூங்கில் நெல்,நாவல், கூவைக்கிழங்கு, தேமா ,ஆசினிப்பலா,பலா ,ஐவனம், வெண்ணெய், கரும்பு ஆகிய உணவுப் பொருட்கள் விளைவிக்கப்பட்டு உழவுத் தொழில் சிறப்புற்று விளங்கியதை அறிய முடிகிறது.

## தச்சுத் தொழில்

"தச நான்கு எய்திய பண்ணை மருள் நோன்தாள்,

கூர் உளிக்குயின்ற, ஈர் இலை இடை இருபு,

தூங்கு இயல் மகளிர் வீங்கு முலைகடுப்பப்

உடை திரண்டிருந்த குடக்க, இடை திரண்டு,

உள்ளி நோன் முதல் பொருத்தி, அடிமைந்து,

பேர் அளவு எய்திய பெரும் பெயர்ப் பாட்டில்" நெடுநல்வாடை 115 - 135

பத்துப்பாட்டு பாடலும் பொருளும் உரையாசிரியர் முனைவர் க.த.நீலகண்டன், 2000, ப -60

நெடுநல்வாடையில் நக்கீரர் யானையின் தந்தத்தினால் கால்கள் அமைத்து வட்டக் கட்டில் உருவாக்கப்பட்டது. கட்டிலின் காலின் கீழே அமைக்கப்பட்டிருக்கும் குமிழ் உள்ளிப் பூண்டின் வடிவினதாகும் .காலின் மேல் அமைந்துள்ள குமிழ், சூல் முற்றிய பெண்ணின் மார்பு போன்று விளங்குகின்றன.கட்டிலின் இடையே தச்சன் கூரிய உளியால் இலை உருவத்தை வடிவமைத்து கட்டில் உருவாக்கப்பட்டது .இத்தகைய கட்டிலானது அரசமா தேவியுடன் துயில்வதற்கு ஏற்றவாறு பெரிய அளவுடன் அமைக்கப்பட்ட கட்டில் பெரும் புகழ் உடையதாக விளங்குகிறது. தொழில்நுட்ப வசதி இல்லாத காலத்தில் தச்சன் தன் உளியின் துணைகொண்டு யானைத் தந்தத்தினைப் பயன்படுத்தி வட்டக்கட்டிலை மிக நுட்பமாகவும் நேர்த்தியாகவும் வடிவமைத்த பாங்கு, தச்சனின் தொழில்நுட்ப சிந்தனையும் தச்சுத் தொழில் சிறப்புற்றதையும் காணலாகிறது.

## விசிறித் தொழில்

“கை வல் கம்மியன் கவின் பெறப் புனைந்த

செங் கேழ் வட்டம் சுருக்கி, கொடுந்தறி

சிலம்பி வாழ் நூல் வலந்தன தூங்க

வான் உற நிவந்த மேல் நிலை மருங்கின்" நெடுநல்வாடை 57 - 60

பத்துப்பாட்டு பாடலும் பொருளும் உரையாசிரியர் முனைவர் க.த.நீலகண்டன், 2000, ப - 57

கைத்தொழிலில் சிறந்து விளங்கக்கூடிய ஒருவன் செய்த அழகிய சிவந்த நிறமுடைய ஆலவட்டம் உறையிடப்பட்டுள்ளது. அதன் கைப்பிடியாகிய வளைந்த கோலிலே சிலந்தி நூல் சூழப்பட்டுப் பயனின்றித் தொங்கி கொண்டிருக்கின்றது.இவ்வாலவட்டம் என்பது தெய்வங்கள் மற்றும் அரசர்கள் ஊர்வலத்தின் போது இருபுறமும் ஏந்தப்பட்டு வரும் அலங்கார மரியாதைப் பொருளாகும். பொதுவாக வட்ட வடிவிலான கேடய வடிவில் காணப்படும் .இவை துணி, பனை ஓலை முதலியவற்றால் செய்யப்படும் வட்டமான பெரு விசிறியாகும் .இச்செய்தியின் வாயிலாக விசிறித் தொழில் மேம்பட்டு விளங்கியதை உணர முடிகிறது.

## உப்புத்தொழில்

“இருங் கழிச் செறுவின் வெள் உப்புப் பகர்நரொடு,

ஒலி ஓவாக் கலியாணர்

முது வெள்ளிலை” மதுரைக்காஞ்சி 117 - 119

பத்துப்பாட்டு பாடலும் பொருளும் உரையாசிரியர் முனைவர் க.த.நீலகண்டன்,2000,ப - 180

மதுரைக்காஞ்சியில் மாங்குடி மருதனார் பெரிய உப்பங்கழிகளிடத்தே உப்பு விற்கும் தொழில் செய்பவர் உப்பினை விலை கூறி விற்கும் ஒலியின் முழக்கம் அடங்காத புது வருவாயினை உடைய ஊர் வெள்ளிலை. இந்நிலத்தில் வாழும் மக்கள் உப்பினை விற்றுத் தன் வாழ்வாதாரத்தை பெருக்கிக் கொண்டனர். எனவே இச்செய்தியின் வாயிலாக சங்ககாலந்தொட்டு நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மக்கள்

உப்பளங்கள் அமைத்து உப்புத் தயாரித்து பல்வேறு இடங்களுக்குச் சென்று உப்பை விற்றுத் தன் வாழ்வை மேம்படுத்திக் கொண்டனர் என்பதை அறிய முடிகிறது.

"சில பண்டங்கள் உற்பத்தியான இடத்திலேயே விற்பனையாகின. சிலவற்றை ஊர் ஊராக எடுத்துச் சென்று விற்று வருவார்கள். உப்பு அப்படி விற்கப்பட்ட பண்டந்தான். மிளகையும் ஊர் ஊராகச் சென்று விற்பது உண்டு.பண்டங்களை வண்டிகளின் மேலும், கழுதைகளின் மேலும் ஏற்றிச் செல்லுவர்." தமிழக வரலாறு மக்களும் பண்பாடும். கே.கே.பிள்ளை, 2000, ப -153

## இறக்குமதித் தொழில்

"நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்

காலின் வந்த கருங்கறி மூடையும்

வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்

குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்

தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்

கங்கை வாரியும் காவிரிப் பயனும்

ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்". பட்டினப்பாலை 185 - 191

பத்துப்பாட்டு பாடலும் பொருளும் உரையாசிரியர் முனைவர் க.த.நீலகண்டன், 2000,ப - 112

பட்டினப்பாலையில் கடியலூர் உருத்திரங்கண்ணனார் மரக்கலங்களிலிருந்து கடல் வழியாகக் கொண்டு வரப்பட்ட குதிரைகள், கரிய மிளகுப் பொதிகள் ,மேருமலையில் தோன்றிய மாணிக்கக் கற்கள்,சாம்பூநதம் என்ற பொன்னும் ,பொதிய மலையில் தோன்றிய சந்தனம், அகில்கட்டைகள் ,கீழ்த் திசைக் கடலில் விளைந்த பவளம், கங்கைப் பகுதியில் உற்பத்தியாகும் பொருட்கள்,காவிரிக் கரைப் பகுதியில் விளைந்த பொருட்கள், ஈழநாட்டின் உணவுப்பொருட்கள் சீனம் முதலிய பிற நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட கற்பூரம், பன்னீர் ,குங்குமம் போன்ற பொருட்கள் இவை தவிர பெரிய பல பொருட்களும் நிலத்தின் வழியாகும் நீரின் வழியாகவும் புகார் நகரத்தில் விற்பனை செய்வதற்காக் கொண்டு வரப்பட்டன என்னும் இச்செய்தியின் வாயிலாக பல்வேறு நாடுகளில் இருந்து குதிரைகளும் பலவகை பொருட்களும் இறக்குமதி செய்யப்பட்டு அவை வணிகத் தெருக்களில் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் இறக்குமதித் தொழில் சிறப்புற்று விளங்கியதைக் காண முடிகிறது.

ஏற்றுமதி இறக்குமதித் தொழில்

“முழங்கு கடல் தந்த விளங்கு கதிர் முத்தம்,

சுரம் போழ்ந்து அறுத்த கண் நேர் இலங்கு வளை,

பரதர் தந்த பல்வேறு கூவம்,

இருங் கழிச் செருவின், தீம்புளி, வெல் உப்பு,

பரந்து ஓங்கு வரைப்பின் வன் கைத் திமிலர்

கொழு மீன் குறை இய துடிக் கண் துணியல்

விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்

நனந் தலைத் தே எத்து நன் கலன் உய்ம்மார்,

புணர்ந்து உடன் கொணர்ந்த புரவியோடு, அனைத்தும்,

வைகல் தோறும் வழிவழிச் சிறப்ப" மதுரைக்காஞ்சி 315 - 324

பத்துப்பாட்டு பாடலும் பொருளும் உரையாசிரியர் முனைவர் க.த.நீலகண்டன்,2000,பக் - 191 - 192

மதுரை காஞ்சியில் மாங்குடி மருதனார் பாண்டிய நாட்டிலிருந்து முத்து,சங்கு, வளையல்கள்,பல்வேறுபட்ட பண்டங்கள் ,இனிப்புப் புளி,வெள்ளிய உப்பு ,கொழுத்த மீன்கள் போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன.யவனம் முதலிய நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட குதிரைகள் இறக்குமதியாயின. பாண்டிய நாடானது ஐந்நிலங்களாலும் வளம் பல பெற்றுத் திகழும் நாடாக விளங்குகிற்று .எனவே 2000 ஆண்டுகளுக்கு முன்னே நடந்த கடற்கரை வியாபாரமானது ஏற்றுமதி இறக்குமதித் தொழில்களாக நடைபெற்றன என்பதை இச்செய்தியின் வாயிலாக தெரிந்துகொள்ள முடிகிறது.

## பல்வகைப் தொழில்கள்

"கோடு போழ் கடைநரும் திரு மணி குயினரும்

சூடுறு நன் பொன் சுடர் இழை புனைநறும்,

பொன் உரை காண்பரும், கலிங்கம் பகர்நரும்

செம்பு நிறை பொண்மரும், வம்பு நிறை முடி நறும்

பூவும் புகையும் ஆயும் மாக்களும்,

எவ் வகைச் செய்தியும் உவமம் காட்டி,

உன்னிதின் உணர்ந்த நுழைந்த நோக்கின்

கண்ணுள் வினைஞரும்." மதுரைக்காஞ்சி 511 - 518

பத்துப்பாட்டு பாடலும் பொருளும் உரையாசிரியர் முனைவர் க.த.நீலகண்டன், 2000, ப -203

மதுரைக்காஞ்சியில் மாங்குடி மருதனார் சங்குகளை அறுத்து வளையல் முதலியவற்றைக் கடை வாரும் அழகிய மணிகளைத் துளையிடுவாரும் தீயிலிட்டுப் பொன்னை உருக்கி பல அணிகளைச் செய்வாரும் பொன்னை உரைக்கல்லில் உரைத்து உரையை அறுதியிடும் பொன் வானிகரும் புடவைகளை விற்பாரும் செம்பினை நிறுத்து அதனை வாங்கிக் கொள்வாரும் கச்சுக்களைத் தம் தொழில் திறன் முழுவதும் காட்டி பல வகை முடிகள் முடிவாரும் பூக்களையும் சந்தனம் ,அகில் முதலிய புகைக்கும் பொருட்களையும் நன்றாக ஆராய்ந்து விற்பாரும் எவ்வகைப் பொருளுக்கும் ஒப்புமை காட்டும் கூர்மையான அறிவுடைய ஓவியத் தொழிலாளரும் இங்கு கூறப்படாத பிற வணிகர்களும் சிறியோர் ,பெரியோர்களும் ஆகிய நெய்தல் தொழிலைச் செய்பவர்களும் திரண்டு நான்கு வகைத் தெருக்கள் தோறும் ஒருவர் காலோடு ஒருவர் கால் தொட்டாற் போன்று நெருங்கி நின்று வணிகம் செய்தனர் என்பதன் மூலம் மதுரையில் அரசனுடைய அரண்மனையை சூழ்ந்து விளங்கும் நான்கு தெருக்களிலும் வாணிகம் நடைபெற்றதை இச்செய்தியின் வாயிலாக புலனாகிறது.

"இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் நெசவுத்தொழில் சிறந்திருந்தது. தமிழர்கள் பருத்தி நூல் நெசவிலும் பட்டு நூல் நெசவிலும் தலைசிறந்திருந்தனர். இவ்வுஉண்மையைத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றாலும் காணலாம்."

தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், கே.கே.பிள்ளை, 2000, ப - 212

## முடிவுரை

இயற்கையோடு இணைந்து வாழ கற்றுக் கொண்ட மனிதன், இயற்கையாகக் கிடைக்கும் உணவுப் பொருட்கள் மற்றும் பிற பொருட்களை வைத்து வாழத் தொடங்கினான். பண்ட மாற்றுமுறை மூலமாகத் தன் உணவுத் தேவைகளையும் பிற தேவைகளையும் நிறைவேற்றிக் கொண்டான்.தான் உண்ட உணவுப் பொருட்களையே பின்னாளில் அதையையே தொழில்களாக உருவாக்கி நாகரீகமாக வாழ்ந்தான். மேலும் நாகரீகம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்குப் பிறகு தான் உற்பத்தி செய்த உணவுப் பொருட்கள் மற்றும் பிற பொருள்களைக் கப்பல்களின் வாயிலாக ஏற்றுமதி செய்தும் தனக்குத்

தேவையான பொருட்களை இறக்குமதியும் செய்தான். இவ்வாறாக பல்வேறு படிநிலைகளில் தொழில்கள் மேம்பாடு அடைந்ததை இவ்ஆய்வின் வாயிலாக அறிய முடிகிறது.

## References

சிதம்பரனார், சாமி (2011) தமிழர் வாழ்வும் பண்பாடும்,சாரதா பதிப்பகம், சென்னை.

நீலகண்டன், க.த. (2000) பத்துப்பாட்டு பாடலும் பொருளும், முதற் பதிப்பு, சிவசக்தி நிலையம், சென்னை.

பிள்ளை, கே.கே (2000) தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

மோகன். இரா. (2014), பத்துப்பாட்டு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License